எல்லோரையும் நல்லோராக்கும்

**Sri Rama Nama Bank**

சுதந்திரமாக நாமப்பணிகள் செய்து வரும் நாம அடிமைகள்
RAMA MANTHIRAM, No.2/3, Vinayagam St,
West Mambalam, Chennai – 600 033
Phone # 044 -24893736 / Cell - 9445693295
www.namalayam.org / Mail: ramamanthiram@gmail.com

**Sri Rama Nama Prathishta Sthalam**

36-A Gandhi Nagar, Katta bomman 2nd Street, Ganapathy, Coimbatore

| | |
|---|---|
| Sri Sethuraman 99528 34538 | Sri Purushothaman 93631 04337 |
| Sri Subramaniam 96293 87424 | Sri Rajesh govinda rajulu 92444 03188 |
| Sri Sivaraman 98651 27475 | Sri Hari 99447 70127 |


## தர்மங்கள்

தர்மங்கள் பல வகை அனைத்துமே உயர்வானவைகள்தான்.

பகவன் நாமம் என்பதும் ஒரு வகை .

இப்போதைய காலம் கலியுகம் எனப்படுகிறது.

| யுகமும் தர்மமும் | |
|---|---|
| க்ருதம் | த்யானம் |
| த்ரேதா | யாகம் |
| த்வாபரம் | பூஜை |
| கலி | நாமம் |

தெய்வம்,மதம்,ஒழுங்குஇவைகளில் அவநம்பிக்கை, சண்டை, கலகம், தற்புகழ்ச்சி, பொய்மை ,கபடம்,டாம்பீகம் போன்ற துர்குணங்களே கலியுகத்தின் விசேஷ குணங்கள்.

அசிரத்தை,சுலபமாய் பலன்,சோம்பேறித்தனம் ஆகியவை நம் குணம்.

உழைப்பு,நாணயம்,த்ருப்தி இவைகள் அற்றவர்களான நமக்கு, நம்முடைய சக்தியின்மையால் எந்த தர்மமும் பலனளிப்பதில்லை.

நம்மைப் போன்றவர்களுக்காகவே பகவன் நாமம் கலியில் ஏற்றது என்று சாஸ்திரங்களால் வழங்கப் பட்டுள்ளது

## நாமத்தின் குண நலன்கள்



பகவன் நாமம் என்பது இறைவனின் பெயர்.

இதை சொன்னாலோ,கேட்டாலோ, நினைத்தாலேயே போதுமானது.

**ஸர்வார்த்த ஸாதனம்**

மற்ற தர்மங்கள் நமக்குப் பிடித்திருந்தாலும் நாம் பங்கேற்கக் கூடியதாக நாமே செய்யக் கூடியதாக் இல்லை.

இது யாவராலும் செய்யக் கூடியது.

**சுக சம்பாத்தியம்**

இது நமக்கு வேண்டியதை- நல்லன எல்லா வற்றையும் தரும்.

இது எளிதில் செய்யக்கூடியது.

**அல்ப ப்ரயாஸம்**

இது சிறு முயற்சியிலேயே கிட்டக்கூடியது.

இது அளவிடற்கரிய பலனைத்தரும்.

**அனல்ப பலம்**

ஸ்ரீ ராம நாம வங்கி இதையே 18 வருடங்களாக செய்து வருகிறது.

## நாம லேகனம்

நீங்களும் எழுதுங்கள்.
எழுத வையுங்கள்.
நாமம் சேருங்கள்.

பகவன் நாமத்தை நீங்கள் உங்கள் இடத்தில் இருந்தவாறே செய்யக்கூடிய வகையில் இறை நாமம் எழுதி உங்களிடமிருந்து நாங்கள் பெறுகிறோம்.

உங்களுக்கு சௌகரியப்பட்ட நேரத்தில் இதை நீங்கள் செய்யலாம்.

உங்களுக்கு சௌகரியப்பட்ட இடத்தில் இதை செய்து கொள்ளலாம்.

பிறருடன் சேர்ந்தோ, தனியாகவோ கூட செய்யலாம்.

## உங்களுடையது உங்களுக்கே




தற்போது இதை உங்கள் இல்லங்களில் வீடுகளில் வைக்கும் கிரஹப் ப்ரதிஷ்டை உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே நடத்தப்பட்ட 15 யாத்திரைகளில் பெரிய ப்ரதிஷ்டைகளுக்கு இடையில் 6 வீடுகளில் ப்ரதிஷ்டை செய்துள்ளோம்.

1 கோடி நாமங்கள் உங்கள் வீட்டில் அது எவ்வளவு சிறிய இடமாயினும் வைத்துக் கொள்ளமுடியும்.

இதற்கு என நீங்கள் தனியாக எந்த கட்டுமானமும் செய்ய வேண்டாம்

அதற்குரிய நாம இல்லமான பெட்டகம் நாங்களே எடுத்து வருவோம். அதன் அளவு 1 1/4 அடி நீளம்,3/4 அடி அகலம்,1 1/2 அடி உயரம் (15"×18"×9") தான் .





இதைபூஜையில் வைக்கலாம். பூஜையறை இல்லாதோர்-தங்கள் முன் அறை அல்லது எந்த அறையிலும் வைத்துக் கொள்ளலாம் .

தங்கள் வீட்டில் திறந்த அலமாரி இருந்தால் அதில் வைக்கலாம்.

இதை உயரத்திலும் வைக்கலாம்.

கண்பார்வை படும்படி வைத்தால் பார்க்கும் போதெல்லாம் நாமம் நினைவுக்கு வரும் .



இதற்கு உங்கள் பிரியம் தான் பூஜை,தனியாக எந்த பூஜையோ,சாஸ்திரமோ கிடையது. எல்லா சாஸ்திரத்திற்கும் மேம்பட்டது

இதை அலங்கரிக்க வேண்டும் என்ற நியமம் இல்லை. ஒரு காகித அலங்கார மாலை கூட போதும்.



எந்த வித படையலோ, ஆராதனையே செய்தாக வேண்டும் என்ற கட்டாயமில்லை.

முடிந்தால் அதைப் பார்க்கும் போது "ராம" என்று சொன்னாலோ, நினைத்தாலேயே அதையே அது சிறந்த பூஜையாக ஏற்றுக் கொள்ளும்.



இதற்கு என்று எந்த பண்டிகையோ, விழாவோ இல்லை.

இது உங்கள் வீட்டு ஜனன(பிறப்பு) த்தீட்டு,மாதவிலக்கு தீட்டு,மரணத் தீட்டு எல்லாவற்றிலும் உங்களை பரிசுத்தமாக வைத்துக்கொள்ளும்.

இதை யாரும் எந்த நிலையிலும் அசுத்தப்படுத்தவோ, அவமரியாதையோ செய்ய இயலாது.

அவமதிப்பவரையும் கருணையோடு காக்கும் குணம் கொண்டது.

இது உங்களின் மிகச் சிறந்த சொத்தாக தன்னை ஆக்கிக் கொள்ளும்.

இதை நீங்கள் வைத்தபின் இது தரும் அளவிலாத பலன்கள்,ப்ரசினைகளை தீர்க்கும் சாமர்த்யம்,எதிலும் நல்லதை தேர்ந்தெடுத்து வழங்குவதும்,கெடுதல்களை விலக்குவதும்,குழப்பங்களை தீர்ப்பதிலும், தெளிவைத் தருவதிலும்,எல்லாவற்றிற்கும் மேலாக த்ருப்தியையும், அமைதியையும் தரும் குணத்தினாலேயே உங்களுக்கு இது ஒரு நல்ல நண்பனாக தன்னை ஆக்கிக் கொள்ளும். நீங்கள் அதை எப்போதும் சீராட்டும் படியாக தன்னை ஆக்கிக் கொள்ளும்.

**க்ரஹ (இல்ல) ப்ரதிஷ்டை**
கலியுக தர்மமான நாமம் பரவலாக எல்லா இடத்திலும், பரவும்படியாகவும், நாமம் இருக்க வேண்டியது. அதற்கு எந்த கட்டுப்பாடோ, நியமமோ, ஆகமமோ இல்லாததால் நாமஸ்மரணத்தை உத்தேசித்து, நாமக்கோவில்களாக இல்லங்கள் ஆகவேண்டும்.

## சிறுதுளி பெருவெள்ளம்

நீங்கள் வாடகை வீட்டிலிருந்தால்குடிபெயரும் போது உங்கள் எல்லா சொத்துகளுக்கும் முன்னதாக இதை எடுத்துக் செல்வீர்கள். புதிய வீடு கட்டினால் தனக்கு என ஒரு இடம் இது கேட்காது. உங்களை தர வைக்கும். உங்கள் விட்டு பெண்ணோ, பிள்ளையோ தனிவீடாகப் போகும் போது அவர்கள் இதை எடுத்துச் செல்லலாம்.

உங்கள் வீட்டில் நல்லது, கெட்டது எல்லாவற்றையும் இதனிடம் சொல்லி நீங்கள் மனம் ஆறலாம்.

உங்கள் வீட்டிற்கு யார் வந்தாலும்,எந்த நேரமாயினும், எந்த நிலையில் இருந்தாலும் அவர்களிடம் இதை பெருமையாக நீங்கள் அறிமுகப் படுத்தலாம். அவர்கள் இதை தொடலாம்,வணங்கலாம்.

உங்களுக்கு ஆசையிருப்பின் அவ்வப்போது இதை இடம் மாற்றி வைக்கலாம்.

மையத்தில் வைத்து சுற்றி வரலாம்.பத்திரமாக கையாள வேண்டியது ஒன்றுதான் உங்கள் பொறுப்பு. தண்ணீர்,தீ இவைகள் இதன் அருகாமையில் வராமல் இருந்தால் போதும்.

### எங்களின் பிச்சை உங்கள் செல்வம் உங்கள் உழைப்பு பிறரின் செல்வம்.

இந்த நாமத்தால் உங்கள் அக்கம்,பக்கம் இருப்போருக்கும் நாம ஸ்மரணம் (நினைவு) ஏற்படும்.
பிறருக்கு இதை தரிசிப்பதனாலேயே பல ப்ரச்சனைகள் தீரும்.

இறைவனே உங்களில் பலர் எழுதிய நாமங்களாக உங்களோடு உங்கள் சுக,துக்கங்களில் எந்த வித கோரிக்கையும், தேவையும்,கேட்காமல் பங்கு கொள்ள வந்துள்ளான்.

இதன் பலனை அனுபவித்த பின், நீங்கள் பிறருக்குச் சொல்லுங்கள்.

அதன் மூலமாக இன்னோர் இல்லம் பிரகாசமடையட்டும் . வேறு ஒரு பகுதி செழிப்பாகட்டும். அதுவே உங்களுக்கு பெரும் திருப்தியைத் தரும்.

இதுவே எங்கள் கோரிக்கை. இதை நாங்கள் உங்களிடம் பிச்சையாகவே கேட்கிறோம்.